செ.வெ.எண்: 106/2020 நாள்: 21.02.2020

# திருவண்ணாமலை மாவட்டத்தில் 5 அரசு பள்ளிகளை சேர்ந்த 695 மாணவர்களுக்கு ரூ.14.98 இலட்சம் செலவில் விலையில்லா மிதிவண்டிகள் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் வழங்கினார்...

திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை சார்பாக இன்று (21.02.2020) நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், செய்யாறு ஊராட்சி ஒன்றியம், முனுகப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளி, மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், குண்ணத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளி, ஒண்ணுபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி, கண்ணமங்கலம் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளை சேர்ந்த 307 மாணவர்கள், 388 மாணவிகள், என மொத்தம் 695 மாணவர்களுக்கு ரூ.27.39 இலட்சம் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், ஆரணி வருவாய் கோட்ட அலுவலர் திருமதி. இல. மைதிலி, மாவட்ட கல்வி அலுவலர்கள் திரு. தா. சம்பத்து (ஆரணி), திரு. ப. செல்வராஜ் (செய்யாறு), அரசு பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கங்களின் நிர்வாகிகள், பள்ளி மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விழாவில் பேசியதாவது 'மாண்புமிகு அம்மாவின் வழியில் சிறப்பான ஆட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நடத்தி வருகிறார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி தமிழகத்தை அனைத்து துறைகளிலும் முன்னேற்றப் பாதையில் முதன்மை மாநிலமாக எடுத்துச் சென்று வருகிறார். இதற்காக மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் தமிழகத்திற்கு பல்வேறு விருதுகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு பள்ளிக் கல்வித் துறைக்காக 2019-2020 ஆம் கல்வி ஆண்டில் ரூ.29,000 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது, தற்போது 2020-2021 ஆம் கல்வி ஆண்டிற்கு ரூ.34,181 கோடி நிதி ஒதுக்கீடு செய்து சாதனை புரிந்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை மூலமாக இன்று மட்டும் முனுகப்பட்டு அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 32 மாணவர்கள், 49 மாணவிகள், என மொத்தம் 81 மாணவர்களுக்கு ரூ.3.18 இலட்சமும், குண்ணத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 72 மாணவர்கள், 75 மாணவிகள், என மொத்தம் 147 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.5.81 இலட்சமும், ஒண்ணுபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 75 மாணவர்கள், 86 மாணவிகள், என மொத்தம் 151 மாணவர்களுக்கு ரூ.6.35 இலட்சமும், கண்ணமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 128 மாணவர்களுக்கு ரூ.5.18 இலட்சமும், கண்ணமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் 178 மாணவர்களுக்கு ரூ.6.87 இலட்சமும், ஆக மொத்தம் 307 மாணவர்கள், 388 மாணவிகள் என மொத்தம் 695 மாணவர்களுக்கு ரூ.27.39 இலட்சம் மதிப்பிலான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு அம்மாவின் அரசு விவசாயம் செழிப்பதற்காக டெல்டா மாவட்டங்களை பாதுகாக்கப்பட்ட மண்டலமாக அறிவிக்க அமைச்சரவை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு வரலாற்று சாதனை புரிந்துள்ளது. தமிழகத்தில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ஏரிகள், குளங்கள் தூர்வாரப்பட்டு, மழை காலங்களில் நீர் தேக்கும் வகையில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு விவசாயம் மற்றும் குடிநீர் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு ஏரிகள் அள்ளப்படும் வண்டல் மண் இலவசமாக வழங்கப்படுகிறது. சிறுபன்னை மக்களின் நலன் காக்கும் அரசாக மாண்புமிகு அம்மாவின் அரசு திகழ்கிறது. தற்போது தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் புதுப்பிப்பதற்கு வழங்கப்பட்டு வந்த ரூ.1 கோடி நிதியுதவி, ரூ.5 கோடியாகவும், மசூதிகள் புதுப்பிப்பதற்கு வழங்கப்பட்டு வந்த ரூ.60.00 இலட்சம் நிதியுதவி, ரூ.5 கோடியாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. மாண்புமிகு அம்மாவின் அரசு எப்போதும் சிறுபான்மையினர் நலன் காக்கும் அரசாக திகழ்கிறது.

செய்யாறு ஊராட்சி ஒன்றியம், முனுகப்பட்டு ஊராட்சியில் அமைந்துள்ள மடம் இந்து சமய அறநிலையத் துறை மூலம் ரூ.39.00 இலட்சமும், குடிநீர் மின்விளக்கு பணிகளுக்கு ரூ.10.00 இலட்சமும், என மொத்தம் ரூ.49.00 இலட்சம் செலவில் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள பிரசித்தி பெற்ற பச்சையம்மன் ஆலயம் ரூ.1.70 கோடி மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முனுகப்பட்டு எம்.ஜி.ஆர். சிலை அருகில் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிழற்கூறை அமைத்துதரப்படும். முனுகப்பட்டு தொடக்கப் பள்ளியில் 180 மாணவர்கள் படித்து வருகிறார்கள், இப்பள்ளிக்கு என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து புதிய பள்ளி கட்டிடம் இந்த ஆண்டு கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், குண்ணத்தூர் ஊராட்சியில், கீழ்நகர் பகுதியில் கமண்டல நாக நதியின் குறுக்கு ரூ.2.70 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, விரைவில் இப்பணிகள் ஆரம்பிக்கப்படும், இதன் மூலம் சுற்று வட்டாரத்தில் உள்ள 10 கி.மீ. உட்பட்ட கிராமங்களில் உள்ள ஏரி, குளங்கள், கிணறுகள் பயன்பெற்று அதன் மூலம் விவசாய நிலங்கள் பாசன வசதியும், பொதுமக்களின் குடிநீர் தேவையும் நிவர்த்தி அடையும். மேலும், கீழ்நகர் ஊராட்சியில் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஒண்ணுபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியின் சார்பாக வைக்கப்பட்டுள்ள கோரிக்கை புதிய வகுப்பறை கட்டிடம், மினி கலையரங்கம் ஆகியவை முதலமைச்சரிடம் எடுத்துச் சென்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் மூலமாக நிறைவேற்றித் தரப்படும்.

வண்ணாங்குளம் ஊராட்சியில் என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து ரூ.3.00 இலட்சம் செலவில் புதிய பேரந்து நிழற்கூறை அமைக்கப்படும். நெசவாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் கால்வாய் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இராமசாணிகுப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் தரை, கூடுதல் வகுப்பறை கட்டிடம், கழிப்பறை ஆகிய பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கண்ணமங்கலம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கடந்த முறை விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழாவில் வைக்கப்பட்டு கோரிக்கை நிறைவேற்றும் வகையில் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் தரை என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அனைவரும் அரசு பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்று உங்கள் பெற்றோர்களுக்கும், பள்ளிக்கும், நமது மாவட்டத்திற்கும் பெறுமை சேர்க்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்' என்றார்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று (21.02.2020) மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், கீழ்நகர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், ஆரணி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டு ரூ.12.70 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடம், இராமசாணிகுப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், மாவட்ட ஆட்சியரின் விருப்ப நிதியின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டு ரூ.11.57 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள இரண்டு வகுப்பறை கட்டிடம், ஒண்ணுபுரம் ஊராட்சியில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டு ரூ.17.64 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற கட்டிடம், ஆகிய கட்டிடங்களை திறந்து வைத்தார்கள். மேலும், இராசாணிகுப்பம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் மாநில அளவில் நடைபெற்ற அபாகஸ் போட்டியில் பல்வேறு பிரிவுகளில் வெற்றி பெற்று கோப்பை மற்றும் சான்றிதழ் மாண்புமிகு அமைச்சரிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்கள், அமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு பாராட்டு தெரிவித்து குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**